[1978 மார்ச் 6

கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் கடன் கொடுப்பதற்கு உண்டான நடவடிக்கைகளை இந்தத் துறை நிச்சயம் பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடன் நிவாரண மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

*408 வினு—திரு. என். வரதராஜன்: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் 25—9—1977 தேதி நடைபெற்ற மதுரை மாவட்ட கடன் நிவாரண மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அரசுக்குக் கிடைத்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அவைமீது அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: (அ) ஆம்.

(ஆ) பேரவையின் முன் அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 9.30]

திரு. எம். அண்ணாமலை: கிணறுகள் வெட்டுவதற்கு நிலவள வங்கி அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் போன்ற ஸ்தாபனங்களில் கடன் வாங்கிக் கிணறு வெட்டியும் சதுப்பு செட் ஆகவும், கடின முறையாகவும் தண்ணீரற்றும் உபயோகமற்ற தண்ணீராகவும் உள்ள நிலையில் அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்ய அரசுக்கு மனுக்கள் வந்தனவா ? அதன் பேரில் அதுபற்றி அரசு பரிசீலித்ததா .

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: கிணறுகளுக்கு வழங்கப்பட்ட கடன்களைத் தள்ளிவைக்க வேண்டும் அல்லது ரத்து செய்ய வேண்டுமென்று ஏராளமான மனுக்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அரசு ஏற்கனவே முடிவு எடுத்துத் தன்னுடைய முடிவை அறிவித்திருக்கிறது.

---

* 154-158-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.